1. Which proviso to which rule of Tamil Nadu Civil Services (Discipline and Appeal) Rules gives powers to the immediate higher authority to frame charges against the members of State Services?

(A) First proviso to rule 12(1) (B) First proviso to rule 12(2)

(C) Third proviso to rule 12(1) (D) Third proviso to rule 12(2)

தமிழ்நாடு குடிமைப் பணிகள் (ஒழுங்கு மற்றும் மேல்முறையீடு) விதிகளில் எந்த விதியின் எந்த காப்புரை, மாநிலப் பணிகளிலுள்ள உறுப்பினர்கள் மீது குற்றச்சாட்டு ஏற்படுத்த உடன் அடுத்த உயர் அதிகாரிக்கு (immediate higher office) அதிகாரம் அளிக்கிறது?

(A) விதி 12(1)-ன் முதல் காப்புரை (B) விதி 12(2)-ன் முதல் காப்புரை

(C) விதி 12(1)-ன் மூன்றாம் காப்புரை (D) விதி 12(2)-ன் மூன்றாம் காப்புரை

2. Apart from the Appointing Authority, the penalty of withholding of increment against a member of subordinate service may be imposed by this authority also

(A) Lower authority

(B) Immediate senior in seniority

(C) Immediate superior officer in subordinate service

(D) Immediate superior officer in State service

சார்நிலைப்பணி உறுப்பினர் மீது ஊதிய உயர்வு நிறுத்தம் எனும் தண்டனையை நியமன அதிகாரி தவிர இந்த அதிகாரியும் விதிக்கலாம்?

(A) கீழ் அதிகாரி

(B) முதுநிலையில் உடனடி அடுத்த மூத்தவர்

(C) சார்நிலைப் பணியிலுள்ள உயர் அதிகாரி

(D) மாநிலப் பணியில் உடனடி உயர் அலுவலர்

3. A member of a subordinate service shall be removed from service by

(A) Superintendent

(B) Appointing authority or any other higher authority

(C) Head of office

(D) Immediate higher officer

ஒரு சார்நிலைப்பணி உறுப்பினர் ——————ஆல் பணிநீக்கம் செய்யப்படலாம்.

(A) கண்காணிப்பாளர்

(B) நியமன அலுவலர் அல்லது பிறிதொரு உயர் அலுவலர்

(C) அலுவலகத் தலைவர்

(D) அடுத்த உயர் அலுவலர்

4. The Article which empowers the Governor of Tamil Nadu to frame Tamil Nadu Civil Services (Discipline and Appeal) Rules, is

(A) Article 309
(B) Article 310
(C) Article 320
(D) Article 311

தமிழ்நாடு குடிமைப் பணிகள் (ஒழுங்கு மற்றும் மேல்முறையீடு) விதிகளை வகுக்க ஆளுநருக்கு அதிகாரம் வழங்கப்பட்ட சட்டக்கூறு

(A) சட்டக்கூறு 309
(B) சட்டக்கூறு 310
(C) சட்டக்கூறு 320
(D) சட்டக்கூறு 311

5. I. The penalties specified under rule 8 (i) & (iii) of Tamil Nadu Civil Services (Discipline and Appeal) Rules shall be imposed on an Assistant Section Officer of TNPSC.

II. The penalty of withholding of increment shall be imposed only against state service officials.

(A) I and II are correct
(B) I only correct
(C) I and II are not correct
(D) II only correct

I. தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய உதவிப் பிரிவு அலுவலர் மீது தமிழ்நாடு குடிமைப் பணிகள் (ஒழுங்கு மற்றும் மேல்முறையீடு) விதிகளின் விதி 8(i) மற்றும் (iii)-ல் உள்ள தண்டனை வழங்கப்படலாம்.

II. ஊதிய உயர்வு நிறுத்தத் தண்டனை மாநிலப் பணி அலுவலர்கள் மீது மட்டுமே வழங்கப்படலாம்.

(A) I மற்றும் II சரி
(B) I மட்டுமே சரி
(C) I மற்றும் II சரியல்ல
(D) II மட்டுமே சரி

6. Reversion due to want of vacancy is not a penalty. Which rule says this?

(A) Tamil Nadu Civil Services (Discipline and Appeal) Rules
(B) Tamil Nadu Government Servants Conduct Rules, 1973
(C) Tamil Nadu Civil Services (Disciplinary Proceedings Tribunal) Rules, 1955
(D) Tamil Nadu Government Servants (Conditions of Service) Act, 2016

காலிப் பணியிடமின்மையால் செய்யப்படும் பணியிறக்கம் ஒரு தண்டனையல்ல, எவ்விதி இவ்வாறு கூறுகிறது?

(A) தமிழ்நாடு குடிமைப் பணிகள் (ஒழுங்கு மற்றும் மேல்முறையீடு) விதிகள்
(B) தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் நடத்தை விதிகள், 1973
(C) தமிழ்நாடு குடிமைப் பணிகள் (ஒழுங்கு நடவடிக்கைகள் தீர்ப்பாயம்) விதிகள், 1955
(D) தமிழ்நாடு அரசுப் பணியாளர் (பணி நிபந்தனைகள்) சட்டம் 2016

7. Which of the following is codified as penalty for violation of rule 19 of Tamil Nadu Government Servants Conduct Rules, 1973?

(A) Dismissal
(B) Withholding of promotion
(C) Censure
(D) Reduction to lower post

தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் நடத்தை விதிகள், 1973-ல் விதி 19 மீறலுக்கு கீழ்காணும் எத்தண்டனை வரையறுக்கப்பட்டுள்ளது?

(A) பணியறவு
(B) பதவியுயர்வு நிறுத்தம்
(C) கண்டனம்
(D) கீழ்நிலைப் பதவிக்கு பணி இறக்கம்

8. Which of the penalty disqualifies a Government Servant from his future employment?

(A) Dismissal from service
(B) Removal from service
(C) Reduction to lower post
(D) Compulsory retirement

ஒரு அரசு அலுவலரை எத்தண்டனை அவரின் எதிர்கால வேலைவாய்ப்பிற்கு தகுதியிழக்கச் செய்கிறது?

(A) பணியிலிருந்து பணியறவு
(B) பணியிலிருந்து பணிநீக்கம்
(C) கீழ்நிலைப் பதவிக்கு இறக்கம்
(D) கட்டாய ஓய்வு

9. Rule 9A of Tamil Nadu Civil Services (Discipline and Appeal) Rules will not be applicable to the officers coming under the administrative control of

(A) Secretary to Government
(B) Chief Secretary to Government
(C) Head of Office
(D) Head of the Department

————————ன் நிருவாகக் கட்டுப்பாட்டின் கீழ் வரும் அலுவலர்களுக்கு தமிழ்நாடு குடிமைப் பணிகள் (ஒழுங்கு மற்றும் மேல்முறையீடு) விதிகளின் விதி 9A பொருந்தாது.

(A) அரசுச் செயலாளர்
(B) அரசு தலைமைச் செயலாளர்
(C) அலுவலகத் தலைவர்
(D) துறைத் தலைவர்

10. I. State Government has powers to impose 'Fine' on a member of a State service.

II. Rule 12 of Tamil Nadu Civil Services (Discipline and Appeal) Rules gives the above powers.

(A) I only correct
(B) II only correct
(C) I and II are correct
(D) I and II are not correct

I. மாநிலப் பணி உறுப்பினர் மீது அபராதம் விதிக்க மாநில அரசுக்கு அதிகாரம் உள்ளது.

II. தமிழ்நாடு குடிமைப் பணிகள் (ஒழுங்கு மற்றும் மேல்முறையீடு) விதிகளில் விதி 12 மேற்குறிப்பிட்ட அதிகாரத்தை வழங்குகிறது.

(A) I மட்டுமே சரி
(B) II மட்டுமே சரி
(C) I மற்றும் II சரி
(D) I மற்றும் II சரியல்ல

11. The lower authority has no jurisdiction over the case dealt with by higher authority. Which rule says like this?

(A) Regulation 18 of TNPSC Regulations, 1954

(B) Rule 14(b) of Tamil Nadu Civil Services (Discipline and Appeal) Rules

(C) Rule 15 of Tamil Nadu Civil Services (Discipline and Appeal) Rules

(D) Rule 17(b) of Tamil Nadu Civil Services (Discipline and Appeal) Rules

மேல்நிலை அலுவலர் கையாளும் நேர்வின் மீது கீழ்நிலை அலுவலர் கையாள வரம்பெல்லை இல்லை. இவ்வாறு எவ்விதி கூறுகிறது?

(A) தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய ஒழுங்குமுறைகள், 1954-ல் ஒழுங்குமுறை 18

(B) தமிழ்நாடு குடிமைப் பணிகள் (ஒழுங்கு மற்றும் மேல்முறையீடு) விதிகளில் விதி 14(b)

(C) தமிழ்நாடு குடிமைப் பணிகள் (ஒழுங்கு மற்றும் மேல்முறையீடு) விதிகளில் விதி 15

(D) தமிழ்நாடு குடிமைப் பணிகள் (ஒழுங்கு மற்றும் மேல்முறையீடு) விதிகளில் விதி 17(b)

12. Which rule says about the authority competent to impose penalty against a Government servant appointed by recruitment by transfer from one service to another service?

(A) Rule 12 of Tamil Nadu Civil Services (Discipline and Appeal) Rules

(B) Rule 10 of Tamil Nadu Civil Services (Discipline and Appeal) Rules

(C) Rule 16A of Tamil Nadu Civil Services (Discipline and Appeal) Rules

(D) Rule 15(a) of Tamil Nadu Civil Services (Discipline and Appeal) Rules

ஒரு பணியிலிருந்து வேறு பணிக்கு பணி மாற்றம் மூலம் ஆளெடுப்பு நியமனம் (Recruitment by Transfer) செய்யப்பட்ட ஒரு அரசு அலுவலர் மீது தண்டனை வழங்கும் அதிகாரம் பற்றி எவ்விதி கூறுகிறது?

(A) தமிழ்நாடு குடிமைப் பணிகள் (ஒழுங்கு மற்றும் மேல்முறையீடு) விதிகளில் விதி 12

(B) தமிழ்நாடு குடிமைப் பணிகள் (ஒழுங்கு மற்றும் மேல்முறையீடு) விதிகளில் விதி 10

(C) தமிழ்நாடு குடிமைப் பணிகள் (ஒழுங்கு மற்றும் மேல்முறையீடு) விதிகளில் விதி 16A

(D) தமிழ்நாடு குடிமைப் பணிகள் (ஒழுங்கு மற்றும் மேல்முறையீடு) விதிகளில் விதி 15(a)

13. The concept of the procedure laid down under rule 17(b) of Tamil Nadu Civil Services (Discipline and Appeal) Rules is derived from

(A) Article 311 of Constitution of India (B) Article 312 of Constitution of India

(C) Article 309 of Constitution of India (D) Article 320 of Constitution of India

தமிழ்நாடு குடிமைப் பணிகள் (ஒழுங்கு மற்றும் மேல்முறையீடு) விதிகளில் விதி 17(b)-ல் வரையறுக்கப் பட்டுள்ள வழிமுறைகள் ——————ன் அடிப்படையில் வகுக்கப்பட்டுள்ளன.

(A) இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் சட்டக்கூறு 311

(B) இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் சட்டக்கூறு 312

(C) இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் சட்டக்கூறு 309

(D) இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் சட்டக்கூறு 320

14. The requirement of further representation from the delinquent officer on the report of inquiry officer is mandatory under which rule?

(A) Rule 17(b)(i) of Tamil Nadu Civil Services (Discipline and Appeal) Rules

(B) Rule 17(c)(i) of Tamil Nadu Civil Services (Discipline and Appeal) Rules

(C) Rule 17(b)(ii) of Tamil Nadu Civil Services (Discipline and Appeal) Rules

(D) Rule 17(d) of Tamil Nadu Civil Services (Discipline and Appeal) Rules

விசாரணை அலுவலரின் அறிக்கையின் மீது குற்றம் சாட்டப்பட்ட அலுவலரிடமிருந்து கூடுதல் விளக்கம் பெறுவது எவ்விதிப்படி கட்டாயமாகிறது?

(A) தமிழ்நாடு குடிமைப் பணிகள் (ஒழுங்கு மற்றும் மேல்முறையீடு) விதிகளில் விதி 17(b)(i)

(B) தமிழ்நாடு குடிமைப் பணிகள் (ஒழுங்கு மற்றும் மேல்முறையீடு) விதிகளில் விதி 17(c)(i)

(C) தமிழ்நாடு குடிமைப் பணிகள் (ஒழுங்கு மற்றும் மேல்முறையீடு) விதிகளில் விதி 17(b)(ii)

(D) தமிழ்நாடு குடிமைப் பணிகள் (ஒழுங்கு மற்றும் மேல்முறையீடு) விதிகளில் விதி 17(d)

15. The rule which envisages the inquiry authority to hold ex-parte inquiry is

(A) Rule 17(a) of Tamil Nadu Civil Services (Discipline and Appeal) Rules

(B) Rule 17(g) of Tamil Nadu Civil Services (Discipline and Appeal) Rules

(C) Rule 17(d) of Tamil Nadu Civil Services (Discipline and Appeal) Rules

(D) Rule 17(f) of Tamil Nadu Civil Services (Discipline and Appeal) Rules

விசாரணை அலுவலர் ஒருசார்பான (ex-parte) விசாரணை செய்ய வழி வகை செய்யப்பட்ட விதி ________________.

(A) தமிழ்நாடு குடிமைப் பணிகள் (ஒழுங்கு மற்றும் மேல்முறையீடு) விதிகளில் விதி 17(a)

(B) தமிழ்நாடு குடிமைப் பணிகள் (ஒழுங்கு மற்றும் மேல்முறையீடு) விதிகளில் விதி 17(g)

(C) தமிழ்நாடு குடிமைப் பணிகள் (ஒழுங்கு மற்றும் மேல்முறையீடு) விதிகளில் விதி 17(d)

(D) தமிழ்நாடு குடிமைப் பணிகள் (ஒழுங்கு மற்றும் மேல்முறையீடு) விதிகளில் விதி 17(f)

16. Part IV of Tamil Nadu Civil Services (Discipline and Appeal) Rules deals with

(A) Revision (B) Appeals

(C) Review (D) Dismissal

தமிழ்நாடு குடிமைப் பணிகள் (ஒழுங்கு மற்றும் மேல்முறையீடு) விதிகளில் பகுதி IV நிர்வகிப்பது ________________.

(A) சீராய்வு (B) மேல்முறையீடுகள்

(C) மறுஆய்வு (D) பணியறவு

17. Before passing any orders imposing major punishments, the Revisioning authority, wherever necessary, shall consult with

(A) State Public Service Commission (B) Backward Classes Commission

(C) State Human Rights Commission (D) Right to Information Commission

பெருந்தண்டனைகள் வழங்கும் முன்னர், சீராய்வு அலுவலர், தேவைப்படும் நேர்வுகளில், ————————ஐக் கலந்தாலோசிக்க வேண்டும்.

(A) மாநில அரசுப் பணியாளர் தேர்வாணையம் (B) பிற்படுத்தப்பட்டோர் ஆணையம்

(C) மாநில மனித உரிமைகள் ஆணையம் (D) தகவல் அறியும் உரிமை ஆணையம்

18. The powers to withholding an appeal lies with

(A) Appellate authority (B) Revisioning authority

(C) Reviewing authority (D) Disciplinary authority

மேல்முறையீட்டை நிறுத்தி வைக்கும் அதிகாரம் படைத்தவர்

(A) மேல்முறையீட்டு அலுவலர் (B) சீராய்வு அலுவலர்

(C) மறு ஆய்வு அலுவலர் (D) ஒழுங்கு நடவடிக்கை அலுவலர்

19. Common disciplinary proceedings can be initiated under rule

(A) 17 (a) of Tamil Nadu Civil Services (Discipline and Appeal) Rules

(B) 17 (b) of Tamil Nadu Civil Services (Discipline and Appeal) Rules

(C) 9 of Tamil Nadu Civil Services (Discipline and Appeal) Rules

(D) 9-A of Tamil Nadu Civil Services (Discipline and Appeal) Rules

பொதுவான ஒழுங்கு நடவடிக்கைகள் ————————ன் கீழ் துவங்கப்படலாம்.

(A) தமிழ்நாடு குடிமைப் பணிகள் (ஒழுங்கு மற்றும் மேல்முறையீடு) விதிகளில் விதி 17(a)

(B) தமிழ்நாடு குடிமைப் பணிகள் (ஒழுங்கு மற்றும் மேல்முறையீடு) விதிகளில் விதி 17(b)

(C) தமிழ்நாடு குடிமைப் பணிகள் (ஒழுங்கு மற்றும் மேல்முறையீடு) விதிகளில் விதி 9

(D) தமிழ்நாடு குடிமைப் பணிகள் (ஒழுங்கு மற்றும் மேல்முறையீடு) விதிகளில் விதி 9A

20. The rule 17(e) of Tamil Nadu Civil Services (Discipline and Appeal) Rules deals with

(A) Dismissal (B) Removal

(C) Compulsory Retirement (D) Suspension

தமிழ்நாடு குடிமைப் பணிகள் (ஒழுங்கு மற்றும் மேல்முறையீடு) விதிகளின் விதி 17(e) ———————— பற்றியது.

(A) பணியறவு (B) பணிநீக்கம்

(C) கட்டாய ஓய்வு (D) தற்காலிக பணிநீக்கம்

21. Which one of the following statements is *true* as per Rule 19 of Tamil Nadu Civil Services (Discipline and Appeal) Rules?

(A) A person who has ceased to be in Government service can also file an appeal

(B) Government servants alone can file an appeal

(C) Dismissed Govt. servant cannot file an appeal

(D) Pensioners cannot file an appeal

தமிழ்நாடு குடிமைப் பணிகள் (ஒழுங்கு மற்றும் மேல்முறையீடு) விதிகளின் விதி 19-ன்படி கீழ்வருவனவற்றுள் எது உண்மையானது?

(A) அரசுப் பணி முடிவுற்ற ஒருவர் கூட மேல்முறையீடு செய்யலாம்

(B) அரசுப் பணியாளர் மட்டுமே மேல்முறையீடு செய்யலாம்

(C) பணியறவு செய்யப்பட்ட அரசுப் பணியாளர் மேல்முறையீடு செய்யலாம்

(D) ஓய்வூதியம் பெறுபவர்கள் மேல்முறையீடு செய்ய இயலாது

22. In a disciplinary proceedings for major penalties, find the correct sequence chronologically :

(i) Calling for further representation

(ii) Inquiry report

(iii) Calling for explanation

(iv) Final order

(A) (i), (ii), (iii) and (iv) (B) (ii), (iv), (i) and (iii)

(C) (iv), (i), (iii) and (ii) (D) (iii), (ii), (i) and (iv)

ஒழுங்கு நடவடிக்கையில் பெருந்தண்டனைகள் வழங்க, சரியான வரிசையினை கண்டுபிடி.

(i) கூடுதல் விளக்கம் கோருதல்

(ii) விசாரணை அறிக்கை

(iii) விளக்கம் கோருதல்

(iv) இறுதியாணை

(A) (i), (ii), (iii) and (iv) (B) (ii), (iv), (i) and (iii)

(C) (iv), (i), (iii) and (ii) (D) (iii), (ii), (i) and (iv)

23. Which rule of Tamil Nadu Civil Services (Discipline and Appeal) Rules states about its applicability?

(A) 2 (B) 5

(C) 1 (D) 8

தமிழ்நாடு குடிமைப் பணிகள் (ஒழுங்கு மற்றும் மேல்முறையீடு) விதிகளின் எவ்விதி அதன் பொருந்துகை (applicability) பற்றி குறிப்பிடுகிறது?

(A) 2 (B) 5

(C) 1 (D) 8

24. A person who, on the date of his appointment as a Member or Chairman of the Commission, was holding a Government post, shall be deemed to have retired from such post with effect from the date

(A) The date of issue of orders for his appointment as a Member or Chairman

(B) The date on which he joins duty as Member or Chairman

(C) The date of Actual retirement in the post held by him under Government

(D) The date of Notification

ஒருவர் தேர்வாணையத்தின் தலைவர் அல்லது உறுப்பினர் பதவிக்கு நியமிக்கப்படும் நாளன்று ஒரு அரசுப் பதவியை வகித்து கொண்டிருந்தால், அவ்வரசுப் பதவியிலிருந்து ———————— முதல் ஓய்வு பெற்றவராக கருதப்படுவார்.

(A) தலைவர் அல்லது உறுப்பினர் பதவிக்கு நியமிக்கப்பட்டு ஆணை வெளியிடப்பட்ட நாள்

(B) தலைவர் அல்லது உறுப்பினர் பதவியில் சேர்ந்த நாள்

(C) அரசின் கீழ் வகிக்கும் பதவியிலிருந்து ஓய்வு பெறும் நாள்

(D) அறிக்கை வெளியிடப்பட்ட நாள்

25. On appointment as Chairman of the Commission a person who is holding a post in Government of India can draw salary, special pay and other allowances till

(A) Normal date Superannuation

(B) Completion of his tenure in the Commission

(C) Date of Appointment

(D) Date of next increment

இந்திய அரசாங்க பதவியிலிருக்கும் ஒருவர் தேர்வாணையத்தின் தலைவராக நியமனம் செய்யப்பட்டால் ———————— வரை ஊதியம், சிறப்பு ஊதியம் மற்றும் பிற படிகள் பெறலாம்.

(A) சாதாரணமாக ஓய்வு பெறும் வயதை நிறைவு செய்யும் நாள்

(B) தேர்வாணைய பதவிக்காலம் முடியும் நாள்

(C) நியமன நாள்

(D) அடுத்த ஊதிய உயர்வு நாள்

26. For imposing penalty of Dismissal from service, the State Government shall consult

(A) Tamil Nadu Public Service Commission

(B) Head of the Department

(C) Union Public Service Commission

(D) Governor

பணியறவு எனும் தண்டனை வழங்க மாநில அரசு ————————ஐ கலந்தாலோசிக்க வேண்டும்.

(A) தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம்

(B) துறைத் தலைவர்

(C) மத்திய அரசுப் பணியாளர் தேர்வாணையம்

(D) ஆளுநர்

27. Regulation 22 of Tamil Nadu Public Service Commission Regulations, 1954 refers to the power of which authority?

(A) Chairman (B) Secretary

(C) Member (D) Governor

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் ஒழுங்குமுறை 1954-ல் ஒழுங்குமுறை 22 ——————ன் அதிகாரம் பற்றியதாகும்.

(A) தலைவர் (B) செயலாளர்

(C) உறுப்பினர் (D) ஆளுநர்

28. Which Regulation brings the Chairman and the members of the commission under the purview of the State Vigilance Commission and Director of Vigilance and Anti-Corruption?

(A) Regulation 7-A (B) Regulation 7-D

(C) Regulation 6-A (D) Regulation 5-A

தேர்வாணையத் தலைவர் (ம) உறுப்பினர்களை மாநில விழிப்புப் பணி ஆணையம் மற்றும் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு இயக்குநரின் உள்ளீட்டு எல்லைக்குள் கொண்டு வரும் ஒழுங்குமுறை எது?

(A) ஒழுங்குமுறை 7A (B) ஒழுங்குமுறை 7D

(C) ஒழுங்குமுறை 6A (D) ஒழுங்குமுறை 5A

29. Which Regulation has mandates the State Government to consult the Commission for appointment from one class to another class in the State Service specified in Annexure I-B?

(A) Regulation 17 (B) Regulation 18

(C) Regulation 16 (D) Regulation 15

இணைப்பு I-B-ல் குறிப்பிடப்பட்ட மாநிலப் பணிகளில், ஒரு தொகுதியில் இருந்து மற்றொரு தொகுதிக்கு நியமனம் செய்ய மாநில அரசு, தேர்வாணையத்தை கலந்து ஆலோசிக்க வேண்டும் என வலியுறுத்தும் ஒழுங்குமுறை எது?

(A) ஒழுங்குமுறை 17 (B) ஒழுங்குமுறை 18

(C) ஒழுங்குமுறை 16 (D) ஒழுங்குமுறை 15

30. Regulation 7 (1) of Tamil Nadu Public Service Commission Regulations,1954 deals with

(A) Leave permissible to members (B) Pension permissible to members

(C) Pay permissible to members (D) Allowances permissible to members

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய ஒழுங்குமுறைகள், 1954-ல், ஒழுங்குமுறை7(1) எப்பொருள் குறித்தது?

(A) உறுப்பினர்களுக்கு அனுமதிக்கப்பட்ட விடுப்பு

(B) உறுப்பினர்களுக்கு அனுமதிக்கப்பட்ட ஓய்வூதியம்

(C) உறுப்பினர்களுக்கு அனுமதிக்கப்பட்ட ஊதியம்

(D) உறுப்பினர்களுக்கு அனுமதிக்கப்பட்ட படிகள்

31. Tamil Nadu Public Service Commission Regulations 1954 consists

(A) 1 Part IX Annexures (B) 4 Parts VI Annexures

(C) 3 Parts VI Annexures (D) 6 Parts IV Annexures

1954-ஆம் ஆண்டின் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய ஒழுங்குமுறைகள் ————————ஐ உள்ளடக்கியதாகும்.

(A) 1 பாகம் 9 இணைப்புகள் (B) 4 பாகங்கள் 6 இணைப்புகள்

(C) 3 பாகங்கள் 6 இணைப்புகள் (D) 6 பாகங்கள் 4 இணைப்புகள்

32. For permitting Compulsory retirement under rule 33 and rule 42 of the Tamil Nadu Pension Rules, 1978 the Consultation of commission is not necessary as per

(A) Regulation 16(1)(iii) (B) Regulation 18(1)(b)(iii)

(C) Regulation 7(4)(c) (D) Regulation 18(2)(a)

தமிழ்நாடு ஓய்வூதிய விதிகள், 1978-ல் விதிகள் 33 (ம) 42-ன் கீழ் கட்டாய ஓய்விற்கு அனுமதி வழங்க ————————ன் படி தேர்வாணையத்தை கலந்தாலோசிக்க வேண்டியதில்லை.

(A) ஒழுங்குமுறை 16(1)(iii) (B) ஒழுங்குமுறை 18(1)(b)(iii)

(C) ஒழுங்குமுறை 7(4)(c) (D) ஒழுங்குமுறை 18(2)(a)

33. The services of a person appointed temporarily as under Secretary in Commission shall be liable to be terminated by the ———————— without notice and without any reason being assigned.

(A) Commission (B) Government

(C) Governor (D) Secretary

தேர்வாணையத்தில் தற்காலிகமாக சார்புச் செயலாளராக நியமிக்கப்பட்டவரது பணிகள் முன்னறிவிப்பு மற்றும் காரணங்களின்றி ————————ஆல் "முடிப்பு" (terminated) செய்யப்படும்.

(A) தேர்வாணையம் (B) அரசு

(C) ஆளுநர் (D) செயலாளர்

34. Which of the following qualification is prescribed for appointment of a person to the posts of Assistant, Personal Clerk, Assistant Section Officer, Accountant and Section Officer in the Commission, by promotion or by recruitment by transfer?

(A) SSLC (B) HSC

(C) Degree (D) PG Degree

ஒரு பதவியுயர்வு அல்லது பணிமாறுதல் முறையில், தேர்வாணையத்தின் உதவியாளர், நேர்முக எழுத்தர், உதவி பிரிவு அலுவலர், கணக்கர் மற்றும் பிரிவு அலுவலர் பதவிகளில் நியமனம் பெற கீழ்க்கண்டவற்றுள் எது தகுதியாக பரிந்துரைக்கப்பட்டுள்ளது?

(A) 10-ஆம் வகுப்பு (B) 12-ஆம் வகுப்பு

(C) பட்டப் படிப்பு (D) பட்ட மேற்படிப்பு

35. In every case of appointment on contract in excess of ———————— years, the Commission shall be consulted before the contract is made or renewed.

(A) 5 years
(B) 3 years
(C) 7 years
(D) 10 years

————————ற்கு அதிகப்படியான கால அளவு கொண்ட ஒப்பந்த அடிப்படையிலான ஒவ்வொரு நியமனத்திற்கும் ஒப்பந்தம் செய்யும் அல்லது புதுப்பிக்கும் முன்னர் தேர்வாணையம் கலந்தாலோசிக்கப்பட வேண்டும்.

(A) 5 வருடங்கள்
(B) 3 வருடங்கள்
(C) 7 வருடங்கள்
(D) 10 வருடங்கள்

36. The list of approved candidates prepared by the Commission shall be published in

(A) Prominent Tamil daily newspaper
(B) Prominent English daily newspaper
(C) Tamil Nadu Public Service Commission Bulletin
(D) Tamil Nadu Government Gazette

தேர்வாணையத்தால் தேர்ந்தெடுக்கப்படும் நபர்களின் பட்டியல் ————————ல் அறிவிக்கப்படுகிறது.

(A) பிரபல தமிழ் நாளிதழ்
(B) பிரபல ஆங்கில நாளிதழ்
(C) தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய செய்தி வெளியீடு
(D) தமிழ்நாடு அரசிதழ்

37. The procedures for conducting competitive examination by the Commission are laid down under which rule of Rules of Procedures of Tamil Nadu Public Service Commission?

(A) Rule 3
(B) Rule 4
(C) Rule 5
(D) Rule 6

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய நடைமுறைகளின் விதிகளில் எந்த விதியில் தேர்வாணையத்தால் நடத்தப்படும் போட்டித் தேர்வுகள் பற்றிய நடைமுறைகள் கூறப்பட்டுள்ளது?

(A) விதி 3
(B) விதி 4
(C) விதி 5
(D) விதி 6

38. The Commission cannot call for the records, at any time, if it is considers necessary, directly from

(A) Government
(B) Head Of Department
(C) Other Subordinate Authority
(D) High Court of Madras

———————— இடமிருந்து தேவைப்படும் ஆவணங்களை, எந்த நேரத்திலும் நேரடியாக தேர்வாணையத்தால் கோரவியலாது.

(A) அரசு
(B) துறைத் தலைவர்
(C) பிற சார்நிலை அதிகாரி
(D) சென்னை உயர்நீதி மன்றம்

39. 'Tribunal' as defined under Tamil Nadu Civil Services (Disciplinary Proceedings Tribunal) Rules, 1955 means

(A) Sales Tax Appellate Tribunal

(B) Tribunal for Disciplinary Proceedings

(C) State Administrative Tribunal

(D) Central Administrative Tribunal

தமிழ்நாடு குடிமைப் பணிகள் (ஒழுங்கு நடவடிக்கைகள் தீர்ப்பாயம்) விதிகள், 1955-ல் வரையறுக்கப்பட்டவாறு "தீர்ப்பாயம்" என்பது

(A) விற்பனை வரி மேல்முறையீட்டுத் தீர்ப்பாயம்

(B) ஒழுங்கு நடவடிக்கைகள் தீர்ப்பாயம்

(C) மாநில நிருவாகத் தீர்ப்பாயம்

(D) மத்திய நிருவாகத் தீர்ப்பாயம்

40. The word 'Criminal misconduct' is defined under

(A) Section 13 of Prevention of Corruption Act, 1988

(B) Section 12 of Prevention of Corruption Act, 1988

(C) Section 12 of Code of Criminal Procedure

(D) Section 13 of Code of Criminal Procedure

"குற்றவியல் தவறான நடத்தை" எனும் வார்த்தை ——————ல் வரையறுக்கப்பட்டுள்ளது.

(A) ஊழல் தடுப்புச் சட்டம், 1988-ன் பிரிவு 13

(B) ஊழல் தடுப்புச் சட்டம், 1988-ன் பிரிவு 12

(C) குற்றவியல் தடுப்புச் சட்டம், பிரிவு 12

(D) குற்றவியல் தடுப்புச் சட்டம், பிரிவு 13

41. Tamil Nadu Civil Services (Disciplinary Proceedings Tribunal) Rules, 1955 shall also apply to all officers of

(A) Municipal Corporations (B) Transport Corporations

(C) Tourism Development Corporations (D) Ware Housing Corporation

தமிழ்நாடு குடிமைப் பணிகள் (ஒழுங்கு நடவடிக்கைகள் தீர்ப்பாயம்) விதிகள், 1955 இவ்அலுவலர்களுக்கும் பொருந்தும்?

(A) மாநகராட்சிகள் (B) போக்குவரத்துக் கழகங்கள்

(C) சுற்றுலா வளர்ச்சிக் கழகம் (D) சேமிப்புக் கிடங்குக் கழகம்

42. The Tamil Nadu Public Service Commission shall refer the corruption related charges to the Tribunal for its enquiry in respect of which of the following officers?

(A) Chairman
(B) Members
(C) Controller of Examinations
(D) Deputy Secretary

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், கீழ்க்காணும் அலுவலர்கள் மீதான லஞ்சம் தொடர்பான குற்றச்சாட்டுகளை தீர்ப்பாயத்தின் விசாரணைக்கு அனுப்பலாம்

(A) தலைவர்
(B) உறுப்பினர்கள்
(C) தேர்வுக் கட்டுப்பாட்டாளர்
(D) துணைச் செயலாளர்

43. The Tribunal for Disciplinary Proceedings shall submit its report directly to

(A) Registrar, High Court
(B) Government
(C) Chief Secretary Government
(D) Head of Department

ஒழுங்கு நடவடிக்கைகள் தீர்ப்பாயம் ——————க்கு நேரடியாக தனது அறிக்கையை சமர்ப்பிக்கலாம்.

(A) உயர்நீதிமன்ற பதிவாளர்
(B) அரசு
(C) அரசு தலைமைச் செயலாளர்
(D) துறைத் தலைவர்

44. The procedure to conduct the enquiry by Tribunal is laid down under which rule of Tamil Nadu Civil Services (Disciplinary Proceedings Tribunal) Rules, 1955?

(A) Rule 9
(B) Rule 5
(C) Rule 8
(D) Rule 6

தமிழ்நாடு குடிமைப் பணிகள் (ஒழுங்கு நடவடிக்கைகள் தீர்ப்பாயம்) விதிகள், 1955-ன் எந்த விதியில் தீர்ப்பாயம் விசாரணை நடத்துவதற்கான நடைமுறைகள் கூறப்பட்டுள்ளது?

(A) விதி 9
(B) விதி 5
(C) விதி 8
(D) விதி 6

45. The authority which may impose penalty against an officer of Subordinate Service in whose case, the findings of the Tribunal were agreed by the Government, is

(A) Government
(B) Commissioner for Disciplinary Proceedings
(C) Disciplinary authority
(D) Head of Department

தீர்ப்பாயத்தின் கண்டறிதல்கள் அரசால் ஏற்றுக் கொள்ளப்படும் நேர்வில் சார்நிலைப் பணி அலுவலர் ஒருவருக்கு தண்டனை வழங்கும் அதிகாரம் படைத்தவர் யார்?

(A) அரசு
(B) ஒழுங்கு நடவடிக்கைகள் ஆணையர்
(C) ஒழுங்கு நடவடிக்கை அதிகாரி
(D) துறைத் தலைவர்

46. In the absence of any specific provisions in Tamil Nadu Civil Services (Disciplinary Proceedings Tribunal) Rules, 1955, the provisions of which rules shall apply?

(A) Prevention of Corruption Act, 1988

(B) Tamil Nadu Civil Services (Discipline and Appeal) Rules

(C) Tamil Nadu Civil Services (Disciplinary Proceedings Tribunal) Rules, 1955

(D) Rules of Procedures

தமிழ்நாடு குடிமைப் பணிகள் (ஒழுங்கு நடவடிக்கைகள் தீர்ப்பாயம்) விதிகள், 1955-ல் கூறப்படாதவைகளுக்கு எவ்விதிகள் பொருந்தும்?

(A) ஊழல் தடுப்புச் சட்டம் 1988

(B) தமிழ்நாடு குடிமைப் பணிகள் (ஒழுங்கு மற்றும் மேல்முறையீடு) விதிகள்

(C) தமிழ்நாடு குடிமைப் பணிகள் (ஒழுங்கு நடவடிக்கைகள் தீர்ப்பாயம்) விதிகள், 1955

(D) நடைமுறைகளின் விதிகள்

47. Who will conduct the enquiries on behalf of the Government or disciplinary authority in the disciplinary cases before the Tribunal?

(A) Prosecutor for Disciplinary Proceedings

(B) Public Prosecutor

(C) Additional Advocate General

(D) Government Pleader

ஒழுங்கு நடவடிக்கைகள் இனங்களில் தீர்ப்பாயத்தின் முன்பு அரசு அல்லது ஒழுங்கு நடவடிக்கை அலுவலரின் சார்பாக விசாரணை நடத்துவது யார்?

(A) ஒழுங்கு நடவடிக்கை வழக்குரைஞர்

(B) குற்றவியல் வழக்குரைஞர்

(C) கூடுதல் தலைமை வழக்குரைஞர்

(D) அரசு வழக்குரைஞர்

48. Powers to constitute Tribunals for Disciplinary Proceedings is vested with

(A) President (B) Governor

(C) High Court (D) Government

———————— இடம் ஒழுங்கு நடவடிக்கைகள் தீர்ப்பாயங்களை உருவாக்கும் அதிகாரம் உள்ளது.

(A) குடியரசுத் தலைவர் (B) ஆளுநர்

(C) உயர்நீதி மன்றம் (D) அரசு

49. The Classification of Government Servants is made under

(A) Tamil Nadu Revised Scales of Pay Rules, 2009

(B) Tamil Nadu Revised Scales of Pay Rules, 2017

(C) Tamil Nadu Government Servants (Conditions of Service) Act, 2016

(D) Tamil Nadu Public Service Commission Regulations, 1954

அரசுப் பணியாளர்களுக்கான தொகுதிகள் ——————————ல் கூறப்பட்டுள்ளது.

(A) தமிழ்நாடு திருத்தியமைக்கப்பட்ட ஊதிய விகித விதிகள், 2009

(B) தமிழ்நாடு திருத்தியமைக்கப்பட்ட ஊதிய விகித விதிகள், 2017

(C) தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் (பணி நிபந்தனைகள்) சட்டம், 2016

(D) தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய ஒழுங்குமுறைகள், 1954

50. The maximum period of penalty of recovery of Government loss during which the name of the official concerned shall not be considered for inclusion in the approved list, is

(A) 12 months (B) 24 months

(C) 36 months (D) 60 months

"அரசுக்கு இழப்பீட்டுத் தொகைப் பிடித்தம்" எனும் தண்டனையின் அதிகபட்சமாக —————— காலம் முடியும் வரை சம்பந்தப்பட்ட அலுவலரது பெயர் ஒப்பளிக்கப்பட்ட பட்டியலில் சேர்ப்பதற்கு கருதவியலாது.

(A) 12 மாதங்கள் (B) 24 மாதங்கள்

(C) 36 மாதங்கள் (D) 60 மாதங்கள்

51. Which of the following is not a bar for inclusion of name of a Government servant in an approved list?

(A) Currency of penalty

(B) Criminal charge sheet is pending

(C) TDP inquiry

(D) Charges under rule 17(b) of Tamil Nadu Civil Services (Discipline and Appeal) Rules are contemplated

ஒரு அரசுப் பணியாளரின் பெயரை தேர்ந்தோர் பெயர்ப்பட்டியலில் சேர்ப்பதற்கு கீழ்கண்டவற்றில் எது தடையாக இல்லை?

(A) தண்டனை நடப்பில் இருப்பது

(B) குற்றவியல் குற்றப் பத்திரிக்கை நிலுவையில் இருப்பது

(C) ஒழுங்கு நடவடிக்கைகள் தீர்ப்பாயத்தின் விசாரணை

(D) தமிழ்நாடு குடிமைப் பணிகள் (ஒழுங்கு மற்றும் மேல்முறையீடு) விதிகளில் விதி 17(பி)-ன் கீழ் ஏற்படுத்தப்பட உள்ள குற்றச்சாட்டுகள்

52. Minimum General Educational Qualification (MGEQ) referred to in section 20(1) of Tamil Nadu Government Servants (Conditions of Service) Act, 2016 is described in

(A) Schedule I (B) Schedule III

(C) Schedule II (D) Schedule IV

தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் (பணி நிபந்தனைகள்) சட்டம், 2016 பிரிவு 20(1)-ல் குறிப்பிடப்பட்டுள்ள குறும பொதுக் கல்வித்தகுதி கீழ்க்கண்டவற்றில் எதில் விவரிக்கப்பட்டுள்ளது?

(A) இணைப்புப் பட்டியல் I (B) இணைப்புப் பட்டியல் III

(C) இணைப்புப் பட்டியல் II (D) இணைப்புப் பட்டியல் IV

53. The powers of the Government for annulment/modify the approved list is laid down under which section of Tamil Nadu Government Servants (Conditions of Service) Act, 2016?

(A) Section 41 (B) Section 61

(C) Section 56 (D) Section 46

தேர்ந்தோர் பெயர் பட்டியலிலிருந்து பெயரினை நீக்குதல் மற்றும் மாற்றுதல் தொடர்பான அரசுக்கான அதிகாரம் தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் (பணி நிபந்தனைகள்) சட்டம், 2016-ன் எந்தப் பிரிவில் வரையறுக்கப்பட்டுள்ளது?

(A) பிரிவு 41 (B) பிரிவு 61

(C) பிரிவு 56 (D) பிரிவு 46

54. If the probationer is found not suitable for a member of a service, the appointing authority shall issue orders for

(A) Removal from service (B) Dismissal from service

(C) Discharge from service (D) Completion of probation

ஒரு தகுதிகாண் பருவத்தினர் ஒரு பணியின் உறுப்பினராவதற்கு தகுதியானவர் இல்லை என்று தெரிந்தால், நியமன அதிகாரி கீழ்கண்டவற்றில் எதற்கான ஆணை வெளியிடலாம்?

(A) பணி நீக்கம் (B) பணியறவு

(C) பணி விடுவிப்பு (D) தகுதிகாண் பருவம் நிறைவு

55. Who is authorised to conduct the Language Test whose educational qualification is VIII Standard and above but below X Standard?

(A) Tamil Nadu Public Service Commission

(B) Employment Exchange

(C) Head of Department

(D) Appointing Authority

எட்டாம் வகுப்பு மற்றும் அதற்கு அதிகமாகவும், பத்தாம் வகுப்பிற்குக் குறைவாகவும் கல்வித்தகுதி பெற்றிருப்போர்க்கு கீழ்கண்டவரில் யார் மொழித்தேர்வு நடத்துவர்?

(A) தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம்

(B) வேலைவாய்ப்பு அலுவலகம்

(C) துறைத் தலைவர்

(D) நியமன அலுவலர்

56. In which rules, the 'Method of Appointment' to a post will be prescribed?

(A) General Rules for Tamil Nadu State and Subordinate Service

(B) Tamil Nadu Government Servants (Conditions of Service) Act, 2016

(C) Special Rules for the post concerned

(D) Rules of Procedures

ஒரு பதவிக்கான நியமன வழிமுறைகள் எந்த விதிகளில் வரையறுக்கப்பட்டிருக்கும்?

(A) தமிழ்நாடு மாநில மற்றும் சார்நிலைப் பணிகளுக்கான பொது விதிகள்

(B) தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் (பணி நிபந்தனைகள்) சட்டம், 2016

(C) சம்பந்தப்பட்ட பதவிக்கான சிறப்பு விதிகள்

(D) நடைமுறைகளின் விதிகள்

57. The Application fee for any recruitment shall be determined by

(A) Chairman (B) Full Commission

(C) Government (D) Governor

எந்த ஒரு ஆட்சேர்ப்புப் பணிகளுக்கும் விண்ணப்பக் கட்டணம் நிர்ணயிப்பது?

(A) தலைவர் (B) முழு தேர்வாணையம்

(C) அரசு (D) ஆளுநர்

58. "Reserve list" is to be prepared with not less than ————————% of the candidates of each reservation group including General turn.

(A) 5 (B) 10

(C) 15 (D) 25

பொது சுழற்சி உள்ளடங்கலாக ஒவ்வொரு ஒதுக்கீட்டு தொகுதியிலும் பணிக்கு விண்ணப்பித்தவர்களில் ————————% குறையாத வகையில் காப்புப் பட்டியல் தயாரிக்கப்பட வேண்டும்.

(A) 5 (B) 10

(C) 15 (D) 25

59. The maximum age limit stipulated under section 15 of the Tamil Nadu Government Servants (Conditions of Services) Act, 2016 for appointment on Compassionate ground in respect of wife or husband of the deceased Government Servant is

(A) 35 years (B) 40 years

(C) 50 years (D) 53 years

இறந்துபோன அரசு ஊழியரின் கணவன் அல்லது மனைவியை கருணை அடிப்படையில் பணி நியமனம் செய்ய தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் (பணி நிபந்தனைகள்) சட்டம், 2016-ன் பிரிவு 15-ல் வரையறுக்கப்பட்டுள்ள உச்ச வயது வரம்பு

(A) 35 வருடங்கள் (B) 40 வருடங்கள்

(C) 50 வருடங்கள் (D) 53 வருடங்கள்

60. The appeal provision for revision of list is available under section ———————— of the Tamil Nadu Government Servants (Conditions of Services) Act, 2016.

(A) 40 (B) 45

(C) 59 (D) 67

தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் (பணி நிபந்தனைகள்) சட்டம், 2016-ன் பிரிவு ————————ல் தேர்ந்தோர் பெயர்பட்டியல் திருத்த மேல்முறையீட்டிற்கான வழிவகை உள்ளது.

(A) 40 (B) 45

(C) 59 (D) 67

61. The notice of resignation shall be given to

(A) Government (B) Appointing authority

(C) Head of the Department (D) Appellate authority

பதவி விலகுவதற்கான அறிவிப்பு வழங்கப்பட வேண்டிய அலுவலர்

(A) அரசு (B) நியமன அலுவலர்

(C) துறைத் தலைவர் (D) மேல்முறையீட்டு அலுவலர்

62. Application for alteration of date of birth shall be rejected, if it is received after ———————— year from entry into service.

(A) One (B) Two

(C) Three (D) Five

பிறந்த தேதியினை மாற்றம் செய்வதற்கு பணியில் சேர்ந்து எத்தனை வருடங்களுக்குப் பின்னர், பெறப்பட்டால் அதனை நிராகரிக்கலாம்?

(A) ஒன்று (B) இரண்டு

(C) மூன்று (D) ஐந்து

63. Application for correction of date of birth in the Service Register of a person whose qualification is less than the Minimum General Educational Qualification may be submitted to

(A) Government (B) Appointing authority

(C) Head of the Department (D) Appellate authority

அலுவலர் குறைந்தபட்ச பொதுக் கல்வி தகுதிக்கு குறைவான தகுதி கொண்டிருக்கும் ஒருவருடைய பிறந்த தேதியினை பணிப்பதிவேட்டில் திருத்தம் செய்ய ———————— இடம் விண்ணப்பிக்கலாம்.

(A) அரசு (B) நியமன அலுவலர்

(C) துறைத் தலைவர் (D) மேல்முறையீட்டு அலுவலர்

64. As per Section 27 of the Tamil Nadu Government Servants (Conditions of Service) Act, 2016, out of the total number of 200, ———————— number is reserved for Scheduled Tribe.

(A) 1 (B) 2

(C) 3 (D) 4

தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் (பணி நிபந்தனைகள்) சட்டம், 2016-ல் பிரிவு 27-ன் படி, மொத்த தெரிவின் அளவான 200-ல், பட்டியல் பழங்குடியினருக்கு ஒதுக்கப்பட்டுள்ள இடம்

(A) 1 (B) 2

(C) 3 (D) 4

65. Which section of Tamil Nadu Government Servants (Conditions of Service) Act, 2016 deals with Appointment of Women?

(A) 25 (B) 26

(C) 27 (D) 28

பெண்களின் நியமனம் குறித்து கூறும் தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் (பணி நிபந்தனைகள்) சட்டம், 2016-ன் பிரிவு எது?

(A) 25 (B) 26

(C) 27 (D) 28

66. While calculating the period of probation, the following period shall be counted?

(A) Duty period

(B) Earned leave period

(C) Extra ordinary leave period of without allowance without medical certificate

(D) Medical leave period

கீழ்காணும் காலங்களில் எதை தகுதிகாண் பருவத்திற்கு கணக்கில் கொள்ளலாம்?

(A) பணிக்காலம்

(B) ஈட்டிய விடுப்பு காலம்

(C) மருத்துவ சான்றில்லாத ஊதியமில்லாத அசாதாரண விடுப்பு

(D) மருத்துவ விடுப்பு காலம்

67. Application for the revision of seniority shall be submitted within a period of

(A) 6 months (B) 1 year

(C) 2 years (D) 3 years

முதுநிலையை திருத்தம் செய்ய எந்த கால கட்டத்திற்குள் விண்ணப்பிக்க வேண்டும்?

(A) 6 மாதங்கள் (B) 1 வருடம்

(C) 2 வருடங்கள் (D) 3 வருடங்கள்

68. In case of State Service, petition for revision of list of approved candidates for promotion or by recruitment by transfer should be submitted within

(A) 5 months (B) 1 month

(C) 6 months (D) 2 months

மாநில பணி நேர்வில், பதவி உயர்வு அல்லது பணிமாறுதல் மூலம் நியமனத்திற்கு தேர்ந்தெடுக்கப்பட்டோர் பட்டியலில் திருத்தம் செய்ய எத்தனை நாட்களுக்குள் விண்ணப்பிக்க வேண்டும்?

(A) 5 மாதங்கள் (B) 1 மாதம்

(C) 6 மாதங்கள் (D) 2 மாதங்கள்

69. Every appeal or review under Section 66(1) of Tamil Nadu Government Servants (Conditions of Service) Act, 2016 shall be disposed of within ————————.

(A) 1 month (B) 2 months

(C) 3 months (D) 4 months

தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் (பணி நிபந்தனைகள்) சட்டம், 2016-ன் பிரிவு 66(1)-ன் கீழ் ஒவ்வொரு மேல்முறையீடு அல்லது மறு ஆய்வு மனுவும் வழங்கப்பட்ட ———————— மாதங்களுக்குள் முடித்து வைக்கப்பட வேண்டும்.

(A) 1 மாதம் (B) 2 மாதங்கள்

(C) 3 மாதங்கள் (D) 4 மாதங்கள்

70. When a person is performing the duties of a post borne on the cadre of such service, he is to be treated as

(A) On duty (B) On leave

(C) Absent (D) On other duty

ஒருவர் ஒரு பணியிலுள்ள பணியிடத்தின் பணிகளை செய்து வரும்போது அவர் எவ்வாறு கருதப்படுவார்?

(A) பணியில் இருப்பவர் (B) விடுப்பில் இருப்பவர்

(C) பணிக்கு வராதவர் (D) மாற்றுப்பணியில் இருப்பவர்

71. Duty of any kind involving subjection to Naval, Military or Air Force law is

(A) On duty (B) Military duty

(C) Official duty (D) Un official duty

கடற்படை, தரைப்படை அல்லது விமானப்படை சட்டத்தின் ஆளுகைக்கு உட்பட்ட எந்த வகையிலுமான பணி என்பது

(A) பணியில் இருத்தல் (B) இராணுவப் பணி

(C) அலுவலகப்பணி (D) அலுவலகம் சாரா பணி

72. A candidate whose name appears in an authoritative list of candidates approved for appointment is called as

(A) Approved candidate (B) Member

(C) Probationer (D) Approved probationer

ஒரு பணிக்கு விண்ணப்பித்தவரின் பெயர் ஒப்பேற்பளிக்கப்பட்ட பணிக்கு விண்ணப்பித்தவர்களின் அதிகார உறுதி பெற்ற பட்டியலில் காணப்பட்டால் அவர் ———————— எனப்படுவார்.

(A) ஒப்பேற்பளிக்கப்பட்ட பணிக்கு விண்ணப்பித்தவர்

(B) உறுப்பினர்

(C) தகுதிகாண் பருவத்தினர்

(D) தகுதிகாண் பருவத்தை முடித்தவர்

73. As per the second proviso to Section 7 of the Tamil Nadu Government Servants (Conditions of Service) Act, 2016, the number of qualified candidates to be considered for the number of vacancies 81 and above is

(A) 200% of the actual number of estimated vacancies

(B) 100% of the actual number of estimated vacancies

(C) 150% of the actual number of estimated vacancies

(D) 175% of the actual number of estimated vacancies

தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் (பணி நிபந்தனைகள்) சட்டம், 2016-ன் பிரிவு 7-ன்படி, 81 காலிப் பணியிட எண்ணிக்கைக்கு கருதப்பட வேண்டிய தகுதி வாய்ந்த விண்ணப்பதாரர்களின் எண்ணிக்கை

(A) மதிப்பிடப்பட்ட காலியிடங்களின் எண்ணிக்கை 200%

(B) மதிப்பிடப்பட்ட காலியிடங்களின் எண்ணிக்கை 100%

(C) மதிப்பிடப்பட்ட காலியிடங்களின் எண்ணிக்கை 150%

(D) மதிப்பிடப்பட்ட காலியிடங்களின் எண்ணிக்கை 175%

74. Which article gives protection from the dismissal, removal or reduction in rank of persons employed in civil capacities under the Union or a State without an inquiry?

(A) Art. 310 (B) Art. 311

(C) Art. 312 (D) Art. 313

மத்திய அல்லது மாநிலத்தின் கீழ் குடிமைப் பணியில் பணிபுரிவோரை விசாரணையின்றி பணியறவு, பணிநீக்கம், பணியிறக்கம் செய்வதிலிருந்து எந்த சட்டக்கூறு பாதுகாப்பளிக்கிறது?

(A) சட்டக்கூறு 310 (B) சட்டக்கூறு 311

(C) சட்டக்கூறு 312 (D) சட்டக்கூறு 313

75. The Chairman and any other member of a State Public Service Commission will be removed from his office by order of the ————————.

(A) President (B) Governor

(C) Chief Justice of India (D) Chief Justice of a State

————————ன் ஆணையின் மூலம் மாநில அரசுப் பணியாளர் தேர்வாணையத் தலைவர் மற்றும் பிற உறுப்பினர்கள் பணிநீக்கம் செய்யப்படுவர்.

(A) குடியரசுத் தலைவர் (B) ஆளுநர்

(C) இந்தியத் தலைமை நீதிபதி (D) மாநிலத் தலைமை நீதிபதி

76. The Union or State Public Service Commission is to be consulted

(A) On all matters relating to methods of recruitment to civil service and civil post

(B) On all matters relating to employment in Public Sector undertaking

(C) On all matters relating to employment in Private Sector undertaking

(D) On all matters relating to employment in Military Service

—————————ற்கு மத்திய அல்லது மாநில அரசுப் பணியாளர் தேர்வாணையம் கலந்தாலோசிக்கப்பட வேண்டும்.

(A) குடிமைப் பணி மற்றும் குடிமைப் பதவிக்கான நியமனங்கள் தொடர்பான அனைத்து நேர்வுகள்

(B) பொதுத் துறை நிறுவனங்களுக்கான நியமனங்கள் தொடர்புடைய அனைத்து நேர்வுகள்

(C) தனியார் துறை நிறுவனங்களுக்கான நியமனங்கள் தொடர்புடைய அனைத்து நேர்வுகள்

(D) இராணுவப் பணிகளுக்கான நியமனங்கள் தொடர்புடைய அனைத்து நேர்வுகள்

77. The recruitment and conditions of service of persons serving the Union or a State has been provided in the

(A) Art.307 (B) Art.308

(C) Art.309 (D) Art.310

மத்திய அல்லது மாநிலத்தில் பணிபுரிவோரின் ஆளெடுப்பு முறை மற்றும் பணி நிபந்தனைகள் பற்றி —————————ல் கூறப்பட்டுள்ளன.

(A) சட்டக்கூறு 307 (B) சட்டக்கூறு 308

(C) சட்டக்கூறு 309 (D) சட்டக்கூறு 310

78. Appointment of persons other than district judges to the judicial service of a State shall be made by

(A) President (B) Chief Justice of India

(C) Governor (D) Chief Justice of a State

மாநில நீதிப் பணிகளில் மாவட்ட நீதிபதிகள் தவிர மற்ற நபர்கள் —————————ஆல் நியமனம் செய்யப்படுவர்.

(A) குடியரசுத் தலைவர் (B) இந்தியத் தலைமை நீதிபதி

(C) ஆளுநர் (D) மாநிலத் தலைமை நீதிபதி

79. To resign his office, a member of a State Public Service Commission may, by writing under his hand addressed to the

(A) President (B) Chairman of the Commission

(C) Chief Justice of a State (D) Governor

மாநில அரசுப் பணியாளர் தேர்வாணைய உறுப்பினர் தமது பணியைத் துறக்க அவரது கையால் எழுதப்பட்ட விண்ணப்பம் —————————க்கு முகவரியிடப்பட வேண்டும்.

(A) குடியரசுத் தலைவர் (B) தேர்வாணையத் தலைவர்

(C) மாநிலத் தலைமை நீதிபதி (D) ஆளுநர்

80. Tenure of a person appointed to a civil post is stated in which Article?

(A) Article 309 (B) Article 310

(C) Article 320 (D) Article 311

குடிமைப் பதவியில் நியமிக்கப்பட்ட ஒருவரின் பணிக்காலம் பற்றி எந்த சட்டக்கூறில் கூறப்பட்டுள்ளது?

(A) சட்டக்கூறு 309 (B) சட்டக்கூறு 310

(C) சட்டக்கூறு 320 (D) சட்டக்கூறு 311

81. Fundamental Rights comes under ———————— of the Constitution of India.

(A) Part I (B) Part II

(C) Part III (D) Part IV

இந்திய அரசியலமைப்புச் சட்டத்தில் அடிப்படை உரிமைகள் ————————ன் கீழ் இடம்பெற்றுள்ளது.

(A) பகுதி I (B) பகுதி II

(C) பகுதி III (D) பகுதி IV

82. The right provided in the Art. 16(2) of the Constitution of India

(A) Right to education

(B) Right against discrimination in the matters of employment

(C) Right against discrimination in the matters of acquiring property

(D) Right to conduct strikes

இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் சட்டக்கூறு 16(2)-ல் வரையறுக்கப்பட்டுள்ள உரிமை

(A) படிப்புரிமை

(B) வேலைவாய்ப்பில் வேற்றுமைக்கெதிரான உரிமை

(C) சொத்து சேர்ப்பதில் வேற்றுமைக்கெதிரான உரிமை

(D) போராட்டம் செய்யும் உரிமை

83. No person shall be dismissed or removed or reduced in rank except after an inquiry in which he has been informed of the charges against him and given a reasonable opportunity under ———————— of the Constitution of India.

(A) Art. 311(2) (B) Art. 311(3)

(C) Art. 311(4) (D) Art. 311(5)

இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் சட்டக்கூறு ————————ன்படி குற்றம் சாட்டப்பட்ட நபர் அக்குற்றச்சாட்டுகளுக்கெதிராக விளக்கமளிக்க போதிய வாய்ப்பளிக்கப்பட்ட பின்னரே பணியறவு அல்லது பணி நீக்கம் அல்லது பணியிறக்கம் செய்யப்படலாம்.

(A) சட்டக்கூறு 311(2) (B) சட்டக்கூறு 311(3)

(C) சட்டக்கூறு 311(4) (D) சட்டக்கூறு 311(5)

84. The % of reservation for Most Backward Class in Tamil Nadu is

(A) 10 (B) 20

(C) 30 (D) 40

தமிழ்நாட்டில் மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு உள்ள இட ஒதுக்கீட்டு %

(A) 10 (B) 20

(C) 30 (D) 40

85. A member of a service shall be eligible for promotion

(A) Before completion of probation (B) After completion of probation

(C) Before completion of one year (D) After completion of 5 years

ஒரு பணியின் உறுப்பினர் பதவியுயர்வுக்குத் தகுதி பெறுவது

(A) தகுதிகாண் பருவம் முடிக்கும் முன் (B) தகுதிகாண் பருவம் முடித்த பின்

(C) ஒரு வருடம் முடியும் முன் (D) 5 வருடங்கள் முடித்த பின்

86. A member of a service who had been on leave for 4 years continuously for higher studies shall be considered for appointment to higher category, after completion of service for ———— on return from leave.

(A) 6 months (B) 1 year

(C) 2 years (D) 3 years

உயர்கல்வி பயில 4 ஆண்டுகள் தொடர்ச்சியாக விடுப்பில் இருக்கும் ஒரு பணியின் உறுப்பினர், விடுப்பில் இருந்து திரும்பியவுடன் ———— பணி முடித்த பிறகே, உயர் பதவியில் நியமனத்திற்கு கருதப்படலாம்.

(A) 6 மாதங்கள் (B) 1 வருடம்

(C) 2 வருடங்கள் (D) 3 வருடங்கள்

87. Overriding effect of special rules provided under Section ———— of Tamil Nadu Government Servants (Conditions of Service) Act, 2016.

(A) 6 (B) 68

(C) 16 (D) 60

தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் (பணி நிபந்தனைகள்) சட்டம், 2016-ன் ———— பிரிவில் இச்சட்டத்தின் மீது சிறப்பு விதிகள் மீது, மீதூர்ந்து இயங்கும் செயல் திறன் (overriding effect) உடையது என கூறப்பட்டுள்ளது.

(A) 6 (B) 68

(C) 16 (D) 60

88. Schedule III relates to which section of TNGS (CoS) Act, 2016?

(A) 20(1) (B) 21

(C) 19 (D) 12

த.நா.அ.ப.(ப.நி.) சட்டம், 2016-ன் எந்தப் பிரிவு, இணைப்புப் பட்டியல் III-உடன் தொடர்புடையது?

(A) 20(1) (B) 21

(C) 19 (D) 12

89. The State Public Service Commission shall present a report annually to the

(A) Governor (B) President

(C) Chief Minister (D) State Government

மாநில அரசு பணியாளர் தேர்வாணையம் ஆண்டறிக்கையை ——————க்கு சமர்பிக்கும்.

(A) ஆளுநர் (B) குடியரசுத் தலைவர்

(C) முதல் அமைச்சர் (D) மாநில அரசு

90. Part XIV of the Constitution of India relates to

(A) Foreign Relations

(B) Services under the Union and the States

(C) Social Service

(D) Security of Union and State

இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் பகுதி XIV-உடன் தொடர்புடையது

(A) வெளியுறவு

(B) ஒன்றிய மற்றும் மாநிலப் பணிகள்

(C) சமூக சேவை

(D) ஒன்றிய மற்றும் மாநிலப் பாதுகாப்பு

91. Rule 5(f) of TNCS (DPT) 1955 Rules lays down for

(A) Appointing a Prosecutor for Disciplinary Proceedings

(B) Production of witnesses

(C) Common disciplinary proceedings

(D) None of the above

த.நா.கு.ப.(ஒ.ந.தீ) விதிகள் 1955-ன் விதி 5(f)-ல் கூறப்பட்டவை

(A) ஒழுங்கு நடவடிக்கைகள் வழக்குறைஞர் நியமனம்

(B) சாட்சிகளை கொண்டு வருதல்

(C) பொது ஒழுங்கு நடவடிக்கைகள்

(D) மேற்கூறப்பட்டவைகள் ஏதுமில்லை

92. Under what authority, the Tamil Nadu Civil Services (Disciplinary Proceedings Tribunal) Rules, 1955 have been framed?

(A) Article 308 of the Constitution of India

(B) Article 309 of the Constitution of India

(C) Article 310 of the Constitution of India

(D) Article 311 of the Constitution of India

எந்த அதிகாரத்தின் பேரில் த.நா.கு.ப.(ஒ.ந.தீ) விதிகள் 1955 ஏற்படுத்தப்பட்டது?

(A) இ.அ.ச. 308-ஆம் ஷரத்துப்படி

(B) இ.அ.ச. 309-ஆம் ஷரத்துப்படி

(C) இ.அ.ச. 310-ஆம் ஷரத்துப்படி

(D) இ.அ.ச. 311-ஆம் ஷரத்துப்படி

93. Which rule of TNCS (D&A) Rules gives powers to the HOD to impose minor penalty against the members of State Service?

(A) Rule 12(2) (B) Rule 12(1)

(C) Rule 8 (D) Rule 17(b)

மாநிலப்பணி உறுப்பினர்கள் மீது குறுந்தண்டனை விதிக்க துறைத்தலைவருக்கு த.நா.கு.ப.(ஒ.(ம) மே.மு) விதிகளின் எவ்விதி அதிகாரமளிக்கிறது?

(A) விதி 12(2) (B) விதி 12(1)

(C) விதி 8 (D) விதி 17(b)

94. A member of a service may be placed under suspension for

(A) Pendency of disciplinary case

(B) Pending recovery of HBA dues

(C) For want of vacancy

(D) Acting in a television serial

ஒரு பணியின் உறுப்பினரை ————————க்காக தற்காலிக பணிநீக்கத்தில் வைக்கலாம்.

(A) ஒழுங்கு நடவடிக்கை நேர்வு நிலுவையில் உள்ளதால்

(B) வீட்டுக்கடன் தொகை நிலுவையில் உள்ளதால்

(C) பணி இடமின்மையால்

(D) தொலைக்காட்சி தொடரில் நடிப்பதற்காக

95. A disciplinary authority shall refer a disciplinary case to the Commissioner for Disciplinary Proceedings for inquiry as

(A) Rule 17A of TNCS (D & A) Rules

(B) Rule 17(e)(1) of TNCS (D & A) Rules

(C) Rule 17B of TNCS (D & A) Rules

(D) Rule 17(g) of TNCS (D & A) Rules

எவ்விதியின்படி ஒரு ஒழுங்கு நடவடிக்கை அதிகாரி, ஒரு ஒழுங்கு நடவடிக்கை நேர்வை விசாரணை செய்ய ஒழுங்கு நடவடிக்கை ஆணையருக்கு அனுப்பலாம்?

(A) த.நா.கு.ப.(ஒ.(ம) மே.மு) விதிகளின் விதி 17A

(B) த.நா.கு.ப.(ஒ.(ம) மே.மு) விதிகளின் விதி 17(e)(1)

(C) த.நா.கு.ப.(ஒ.(ம) மே.மு) விதிகளின் விதி 17B

(D) த.நா.கு.ப.(ஒ.(ம) மே.மு) விதிகளின் விதி 17(g)

96. By which rule, Review under TNCS (D & A) Rules shall be taken?

(A) Rule 35 (B) Rule 36

(C) Rule 37 (D) Rule 32

த.நா.கு.ப.(ஒ.(ம) மே.மு) விதிகளின் எவ்விதியின் படி மறுஆய்வு செய்யப்படலாம்?

(A) விதி 35 (B) விதி 36

(C) விதி 37 (D) விதி 32

97. If State Government propose to pass an original order imposing penalty of Reduction to a lower post, it shall consult

(A) High Court (B) TNPSC

(C) HOD (D) Advocate General

கீழ்நிலை பதவி இறக்கம் எனும் தண்டனையை மாநில அரசு விதிக்க கருதும் போது ———————— கலந்தாலோசிக்க வேண்டும்.

(A) உயர்நீதிமன்றம்

(B) தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம்

(C) துறைத் தலைவர்

(D) அரசு தலைமை வழக்குரைஞர்

98. Confirmation of Service shall be made after the declaration of ————————.

(A) Regularisation (B) Appointment

(C) Probation (D) Termination

பணி உறுதியாக்கம் ———————— அறிவித்தப் பிறகு செய்யப்படலாம்.

(A) பணி வரன்முறை (B) பணி நியமனம்

(C) தகுதிகாண் பருவம் (D) பணி முடிப்பு

99. The right of the probationers and approved probationers to reappointment is prescribed under which section of Tamil Nadu Government Servants (Conditions of Service) Act, 2016?

(A) Section 20 (B) Section 30

(C) Section 10 (D) Section 50

மீண்டும் பணியமர்த்தப்படுவதற்கு, தகுதி காண் பருவத்தினர்கள் மற்றும் ஒப்புதலளிக்கப்பட்ட தகுதிகாண் பருவத்தினர்களுக்கான உரிமைகள் பற்றி, தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் (பணி நிபந்தனைகள்) சட்டம், 2016-ன் எந்த பிரிவில் கூறப்பட்டுள்ளது?

(A) பிரிவு 20 (B) பிரிவு 30

(C) பிரிவு 10 (D) பிரிவு 50

100. The authority competent to impose suspension referred to in rule 17(e) on the members of the Tamil Nadu State Judicial service, as per rule 13 of Tamil Nadu Civil Services (Discipline and Appeal) Rules, is

(A) The High Court of Judicature at Madras

(B) The High Court of Judicature at Delhi

(C) The High Court of Judicature at Bengaluru

(D) Supreme Court of India

தமிழ்நாடு குடிமைப் பணிகள் (ஒழுங்கு மற்றும் மேல்முறையீடு) விதிகளில், விதி 13-ன் படி, தமிழ்நாடு மாநில நீதித்துறை பணி உறுப்பினர்கள் மீது, விதி 17(e)-ல் கண்ட தற்காலிக பணிநீக்கம் செய்ய அதிகாரம் பெற்ற உரிய அதிகாரி

(A) சென்னை உயர்நீதிமன்றம் (B) தில்லி உயர்நீதிமன்றம்

(C) பெங்களூரு உயர்நீதிமன்றம் (D) உச்ச நீதிமன்றம்

**ROUGH WORK**

ROUGH WORK